ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
# ॥ கரையெடுத்த் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கரையெடுத் ॥

திருக்கண்ணபுரம் - 3

‡கரையெடுத்த சுரி சங்கும்⋆ கன பவளத்தெழு கொடியும்⋆
திரையெடுத்து வரு புனல் சூழ்⋆ திருக் கண்ணபுரத்துறையும்⋆
விரையெடுத்த துழாய் அலங்கல்⋆ விறல் வரைத் தோள் புடை பெயர⋆
வரையெடுத்த பெருமானுக்கு⋆ இழந்தேன் என் வரி வளையே (1)

அரிவிரவு முகிற் கணத்தால்⋆ அகிற் புகையால் வரையோடும்⋆
தெரிவரிய மணி மாடத்⋆ திருக் கண்ணபுரத்துறையும்⋆
வரியரவின் அணைத் துயின்று⋆ மழை மதத்த சிறு தறு கண்⋆
கரிவெருவ மருப்பொசித்தாற்கு⋆ இழந்தேன் என் கன வளையே (2)

துங்க மா மணி மாட⋆ நெடு முகட்டின் சூலிகை போம்⋆
திங்கள் மா முகில் துணிக்கும்⋆ திருக் கண்ணபுரத்துறையும்⋆
பைங்கண் மால் விடையடர்த்துப்⋆ பனி மதி கோள் விடுத்துகந்த⋆
செங்கண் மால் அம்மானுக்கு⋆ இழந்தேன் என் செறி வளையே (3)

கணமருவு மயில் அகவு⋆ கடி பொழில் சூழ் நெடு மறுகில்⋆
திணமருவு கன மதிள் சூழ்⋆ திருக் கண்ணபுரத்துறையும்⋆
மணமருவு தோள் ஆய்ச்சி⋆ ஆர்க்கப் போய் உரலோடும்⋆
புணர்மருதம் இறநடந்தாற்கு⋆ இழந்தேன் என் பொன் வளையே (4)

வாய் எடுத்த மந்திரத்தால்⋆ அந்தணர் தம் செய் தொழில்கள்⋆
தீயெடுத்து மறை வளர்க்கும்⋆ திருக் கண்ணபுரத்துறையும்⋆
தாய் எடுத்த சிறு கோலுக்கு⋆ உளைந்தோடித் தயிர் உண்ட⋆
வாய் துடைத்த மைந்தனுக்கு⋆ இழந்தேன் என் வரி வளையே (5)

மடல் எடுத்த நெடுந் தாழை⋆ மருங்கெல்லாம் வளர் பவளம்⋆
திடல் எடுத்துச் சுடர் இமைக்கும்⋆ திருக் கண்ணபுரத்துறையும்⋆
அடல் அடர்த்தன்றிரணியனை⋆ முரண் அழிய அணியுகிரால்⋆
உடல் எடுத்த பெருமானுக்கு⋆ இழந்தேன் என் ஒளி வளையே (6)

www.prapatti.com

வண்டமரும் மலர்ப் புன்னை⋆ வரி நீழல் அணி முத்தம்⋆
தெண் திரைகள் வரத் திரட்டும்⋆ திருக் கண்ணபுரத்துறையும்⋆
எண் திசையும் எழு சுடரும்⋆ இரு நிலனும் பெரு விசும்பும்⋆
உண்டுமிழ்ந்த பெருமானுக்கு⋆ இழந்தேன் என் ஒளி வளையே (7)

கொங்கு மலி கருங்குவளை⋆ கண்ணாகத் தெண் கயங்கள்⋆
செங்கமல முகம் அலர்த்தும்⋆ திருக் கண்ணபுரத்துறையும்⋆
வங்கமலி தடங்கடலுள்⋆ வரியரவின் அணைத்துயின்ற⋆
செங்கமலநாபனுக்கு⋆ இழந்தேன் என் செறி வளையே (8)

வாராளும் இளங்கொங்கை⋆ நெடும் பணைத் தோள் மடப் பாவை⋆
சீர் ஆளும் வரை மார்பன்⋆ திருக் கண்ணபுரத்துறையும்⋆
பேராளன் ஆயிரம் பேர்⋆ ஆயிர வாய் அரவணைமேல்⋆
பேராளர் பெருமானுக்கு⋆ இழந்தேன் என் பெய் வளையே (9)

‡தேமருவு பொழில் புடை சூழ்⋆ திருக் கண்ணபுரத்துறையும்
வாமனனை⋆ மறி கடல் சூழ்⋆ வயலாலி வள நாடன்⋆
காமரு சீர்க் கலிகன்றி⋆ கண்டுரைத்த தமிழ் மாலை⋆
நா மருவி இவை பாட⋆ வினையாய நண்ணாவே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com